## முதன்மை சார்பு நீதிமன்றம், கள்ளக்குறிச்சி

## வாக்கு மூல படிவம்

OS. 109/2014

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | யுவராஜன் | பி.சா. : | 2 |
| த/பெ.பெயர் : | பழனிவேல் | தொழில் : | |
| ஊர் : | கனியாமூர் | தாலுக்கா : | கள்ளக்குறிச்சி |
| வயது : | 37 | நாள் : | 12.12.2023 |

சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் 2ம் பிரதிவாதி ஆவேன். நான் இன்று நீதிமன்றத்தில் எனது எழுத்துமூலமான நிரூபணவாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன்.

1) 11-05-1955 தேதியிட்ட ராமசாமி கவுண்டர் கிரையம் வாங்கிய தாவா 2, 3, 5 அயிட்ட சொத்திற்கான கிரையம் பத்திரத்தின் சான்றிட்ட நகல் (ஆவண எண்.1890/1955) - பி.வா.சா.ஆ.1

2) 24-04-1987 தேதியிட்ட ராமசாமி கவுண்டர் 2 ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த உயில் ஆவணத்தின் சான்றிட்ட நகல் (ஆவண எண். 6/1987) - பி.வா.சா.ஆ.2

3) 01-05-1993 தேதியிட்ட ராமசாமி கவுண்டரின் இறப்பு சான்று நகல் - பி.வா.சா.ஆ.3

4) 22-04-1996 தேதியிட்ட மு..வ.எண்.1142/1994 வழக்கின் தீர்ப்பாணை நகல் அசல் - பி.வா.சா.ஆ.4

5) 27-12-1994 தேதியிட்ட 2 ம் பிரதிவாதியின் தாயார் தனபாக்கியம் தன் வழக்கறிஞர் மூலம் கள்ளக்குறிச்சி வருவாய் வட்டாட்சியருக்கு தாவா சொத்துக்களை பட்டா பெயர் மாற்றம் செய்ய வேண்டாம் என்று அனுப்பிய அறிவிப்பு நகல் - பி.வா.சா.ஆ.5

6) கள்ளக்குறிச்சி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மு.வ.எண்.307/1996 என்ற வழக்கின் பதிவேடு நகல் - பி.வா.சா.ஆ.6

7) 31-08-2005 தேதியிட்ட மு.வ.எண்.307/1996 என்ற வழக்கின் தொகையினை ஜெகநாத செட்டியார், தனபாக்கியம் என்பவரிடம் பெற்றுக்கொண்டதற்கான தாவா டிகிரி பைசல் ரசீது அசல் - பி.வா.சா.ஆ.7

8) தாவா சொத்துக்கள் 2 ம் பிரதிவாதியின் பெயரிலுள்ளதற்கு தீர்வை செலுத்தியதற்கான தீர்வை ரசீதுகள் அசல்கள் -( 7 எண்ணிக்கைகள்) - பி.வா.சா.ஆ.8

9) தாவா சொத்திலுள்ள வீட்டிற்கு 2 ம் பிரதிவாதியின் பெயரிலுள்ள வீட்டுவரி ரசீதுகள் அசல்கள் (3 எண்ணிக்கைகள்) - பி.வா.சா.ஆ.9

10) 28-09-2007 தேதியிட்ட தாவா சொத்திலுள்ள மின் இணைப்பு எண்.5 க்கு ராமசாமி பெயரில் உள்ளதற்கு 2 ம் பிரதிவாதி செலுத்திய டெபாசிட் தொகைக்கான ரசீது அசல் - 1 எண்ணிக்கை - பி.வா.சா.ஆ.10

11) 15-10-2007 தேதியிட்ட தாவா சொத்திலுள்ள மின் இணைப்பு எண்.5 க்கு 2 ம் பிரதிவாதியின் பெயருக்கு மாற்றம் செய்ததற்கு டெப்பாசிட் செய்த ரசீது அசல் - பி.வா.சா.ஆ.11

12) 06-11.2023 தேதியிட்ட தாவா சொத்துக்கள் 2 ம் பிரதிவாதியின் பெயரிலுள்ளது என்பதற்கான கணினி சிட்டா நகல் - பி.வா.சா.ஆ.12

13) இ.பி.44/2003 இன் மு.வ.எண்.307/1996 என்ற நிறைவேற்று மனுவில் 2 ம் பிரதிவாதியின் தாயார் தனபாக்கியம் அம்மாளுக்கு நீதிமன்றம் மூலம் கிடைக்கப்பெற்ற நிறைவேற்று மனு நகல் - பி.வா.சா.ஆ.13

14) இ.பி.44/2003 இன் மு.வ.எண்.307/1996 என்ற நிறைவேற்று மனுவிற்கு, விழுப்புரம் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நகல் மனுவில், மேற்படி நீதிமன்றத்தின் மூலம் கோப்புகள் அழிக்கப்பட்டுவிட்டது என்று கூறி திருப்பப்பட்ட நகல் மனு - பி.வா.சா.ஆ.14

தாவாவை தள்ளுபடி செய்யுமாறு வேண்டுகிறேன்.